OS: 509/2018

Date: 04.07.2022

பெயர் : மனோகரன்

**வாதி தரப்பு சாட்சி 1 ஆஜர், சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி - 1, 2 பிரதிவாதிகள் தரப்பில்**

நான் முதலில் மேட்டூர் நீதிமன்றத்தில் வழக்கு போடும்போது அருள்மிகு ஸ்ரீ ராமலிங்க சௌடேஷ்வரி அம்மன் கோவில் என்றுதான் வழக்கு தாக்கல் செய்தேன். மேற்படி வழக்கானது நானும், மற்ற 5 நபர்களும் சேர்ந்து அறங்காவலராக இருந்து வழக்கு தாக்கல் செய்தோம். மேற்படி வழக்கு தாக்கல் செய்யப்பட்டபோது அறங்காவலர் என பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் trust க்கும், கோவிலுக்கும் சம்மந்தம் இல்லை. Trust க்கும் கோவிலுக்கும் சம்மந்தம் இல்லை என நான் சொல்வதால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. முதன்முதலில் இவ்வழக்கானது மேட்டூர் நீதிமன்றத்தில் 2007 ம் ஆண்டுதான் தாக்கல் செய்யப்பட்டது என்று சொன்னால் சரிதான். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான், அது 02.05.2017 தேதியில் ஏற்படுத்தப்பட்டது. முதன்முதலில் 2017 ம் வருடம்தான் Trust ஏற்படுத்தப்பட்டது என்று சொன்னால் சரிதான். Trust ஆவணம் முறையாக பதிவு செய்யப்படுவதற்கு முன்பாகவே 2007 ம் ஆண்டிலேயே Trust சார்பாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டது ஏற்கக்கூடியதாக இல்லை என்றால் சரியல்ல. P.N.கிருஷ்ணமூர்த்தி என்பவரை நீக்கிவிட்டு சுகமார் என்பவரை நியமிக்கப்பட்டதற்கான தீர்மானம் உள்ளதா என்றால் மேற்படி P.N.கிருஷ்ணமூர்த்தி தானாகவே விலகிகொண்டார். வா.சா.ஆ.12, 13, 14 ஆவண தீர்மானங்களில் மேற்படி P.N.கிருஷ்ணமூர்த்தி தானாக விலகிக்கொண்டதற்கான தீர்மான வாசகங்கள் எதுவும் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். நான் 23 ஆண்டுகாலம் கோவில் பொறுப்பில் இருந்து வருவதாக சொல்கிறேன், மேலும் சுழற்சி முறையில் எத்தனை முறை தேர்ந்தெடுக்கப்பட்டது என்றால் வழக்கு நீதிமன்றத்தில் இருப்பதால் தொடர்ந்து இருந்து வருகிறோம். எந்தெந்த வழக்குகள் நிலுவையில் உள்ளது என்றால் வழக்கு எண்கள் நினைவில் இல்லை. சுழற்சி முறையில் நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்படுவது குறித்து நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

இந்த வழக்கிற்கு பின்னிட்டுதான் அ.வ.42/2010, AS.81/2015 இரண்டு வழக்குகளும் உள்ளது என்றால் சரிதான். அ.வ.42/2010, AS.81/2015 இரண்டு வழக்குகளுக்கான ஆவணங்கள் இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் தாக்கல் செய்யப்படவில்லை. அறங்காவலர் தேர்ந்தெடுக்கப்படவில்லை என வழக்கிற்காக பொய் சாட்சயிம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி 2 வழக்குகளும் நிலுவையில் இருந்ததால் புதிய அறங்காவலர்கள் சுழற்சி முறையில் தேர்ந்தெடுக்கப்படவில்லை. பி.வா.ஆ.1 trust deed வழக்கு நிலுவையில் இருக்கும்போது எப்படி ஏற்படுத்தப்பட்டது என்றால் trust வேறு, கோவில் வேறு. பி.வா.ஆ.1 Trust ஆவணம் எதற்காக எழுதப்பட்டது என்றால் Trust புதிதாக ஏற்பட்டதற்கான ஆவணம். trust ஆனது என்ன பெயரில் ஏற்படுத்தப்பட்டது என்றால் ஸ்ரீ ராமலிங்க சௌடேஷ்வரி அம்மன் கோவில் trust பெயரில்தான் ஏற்படுத்தப்பட்டது. trust க்கும் கோவிலுக்கும் என்னென்ன சொத்துக்கள் உள்ளது என்றால் trust க்கு complex கட்டியுள்ள இடம், பேருந்து நிலையத்திற்கு பின்புறம் சைக்கிள் ஸ்டேண்ட் வாடகைக்கு விடப்பட்டுள்ளது, மற்றொரு சொத்து வழக்கில் உள்ளது, கோவில் சொத்தானது கோவிலை சுற்றி கடைகள் உள்ளது, super market வாடகைக்கு விடப்பட்டுள்ளது, இவ்வழக்கில் உள்ளது கோவில் சொத்தாகும். கடைகள் மற்றும் complex ஆகியவவை எந்த சர்வே எண்களில் அமைந்துள்ளது என்றால் எனக்கு நியாபகம் இல்லை. மண்டபம் இருந்ததை இடிக்கப்பட்டு complex கட்டப்பட்டதை தற்போதுதான் நான் இவ்வழக்கில் சொல்கிறேன் என்றும் எனது வழக்குரை மற்றும் முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.3 ஆவணத்தில் பட்டா எண்.2, சர்வே எண்.81/1A. 81/1N, 81/1S உள்ளது. மேற்படி சொத்துக்கள் எங்கு உள்ளது என தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி பட்டாவானது என்ன பெயரில் உள்ளது என்றால் அருள்மிகு ஸ்ரீ ராமலிங்க சௌடேஷ்வரி அம்மன் கோவில் பெயரில் உள்ளது. எங்கள் சமூகத்தில் சௌடேஷ்வரி, சௌடப்பன், சௌடேஷ்மமான் போன்ற பெயர்கள் வைப்பார்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 அ பதிவேட்டில் சௌடேஷ்வரி அம்மாள் என்ற பெயரில்தான் உள்ளது. மேற்படி வா.சா.ஆ.2 அ பதிவேட்டில் குறிப்பிட்டு அருள்மிகு சௌடேஷ்வரி அம்மன் என இல்லை என்பதால் இது கோவில் சொத்தே இல்லை என சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.2 அ பதிவேட்டில் சர்வே எண்.81/1S சௌடேஷ்வரி அம்மாள் என்ற பெயரில்தான்உள்ளது,

குறிப்பிட்டு அருள்மிகு சௌடேஷ்வரி அம்மன் திருக்கோவில் பெயரில் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள ஆவணப்படியே தாவா சொத்தானது தனிப்பட்ட நபர்களின் சொத்து என்றும், இது கோவில் சொத்தே அல்ல என்று சொன்னால் சரியல்ல. பி.வா.ஆ.1 trust ஆவணம் பதிவு செய்யப்பட்ட பின்புதான் வா.சா.ஆ.14 ல் உள்ள தீர்மானம் போடப்பட்டதா என்றால் சரிதான். வா.சா.ஆ.14 ஆவணம் கோவிலுக்கு சம்மந்தப்பட்ட ஆவணமாகும். வா.சா.ஆ.14 ஆவணத்தில் ரமேஷ்பாபு, தனசேகரன் இருவர் பெயரும் ஆவணத்தில் குறிப்பிடப்படவில்லை என்றால் அவர்கள் கோவில் பொறுப்பிற்கு வரவேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

**வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

ஒப்பம்/PW1

ஒப்பம்/சார்பு நீதிபதி, ஓமலூர்.